# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

### அவசரக் கூட்டப்பொருள்

2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் நாள் திங்கள்கிழமை மாலை 3.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 30.04.12 | 1. | தெருவிளக்கு பராமரிப்பில் மின்சார பயன்பாட்டை குறைக்க L.E.D. விளக்குகள் பயன்படுத்தவும் சுவிட்சு பாக்ஸ்களில் மின்சார சேமிப்பு கருவி பொருத்திடவும் மற்றும் தேவையான மின்சார சேமிப்பு வழிவகை செய்யவும் P.P.P. Modelலில் செயல்படுத்திட நகராட்சிகள் நிர்வாக இயக்குனர் தனது இ1/36321/2011 தேதி 22.02.2012 கடிதத்தில் தெரிவித்துள்ளார். இம்மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் துறை மூலம் பராமரிக்கப்பட்டு வரும் 10 வார்டுகளில் பரிட்சார்த்த முறையில் முதலில் செயல்படுத்திக் கொள்ள நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர அனுமதிக்கலாம்.<br><br>இ3/06748/2012 | 70) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. | இம்மாநகராட்சி பணியாளர் திருமதி. செ. வாசுகி, அலுவலக உதவியாளர் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் ரூ 10000/— வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ 10000/—ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>பி4/6499/2012 | 71) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3. | இம்மாநகராட்சி மலேரியா பிரிவில் உள்ள அர்பன் மலேரியா பணியாளராக பணிபுரியும் திரு எஸ். தாசன் என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் ரூ 10000/— வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ 10000/—ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>பி4/6662/2012 | 72) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 4. | இம்மாநகராட்சியானது 05–08–2008ல் ஆரம்பிக்கப்பட்டு, அக்டோபர் 2011ல் உள்ளாட்சி தேர்தல் மூலம் 60 வார்டு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு முழுமையான மாநகராட்சியாக இயங்கி வருகிறது. இம்மாநகராட்சியுடன் முத்தையாபுரம், சஙகரபேரி, மீளவிட்டான், அத்திமரப்பட்டி மற்றும் தூத்துக்குடி ரூரல் ஆகிய ஐந்து கிராம பஞ்சாயத்துகளும் இணைக்கப்பட்டுள்ளது. 90.663 ச.கிமீ பரப்பளவு கொண்ட தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் சுமார் 450 கிமீட்டரில் சுமார் 85 கிமீட்டர் நீளத்திற்கு மட்டுமே வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.<br><br>தூத்துக்குடி மாநகர் பகுதியான கடல் மட்டத்திற்கு இணையாகவும் சில பகுதிகளில் கடல் மட்டத்திற்க தாழ்வாகவும் உள்ளதாலும், தரையின் நீர்மட்டம் சுமார் 4 முதல் 6 அடியில் இருப்பதாலும் மழைகாலஙகளில் மழைநீர் வெளியேற வழியில்லாமல் வெள்ளப் பெறுக்கு ஏற்பட்டு சாலைகள் பழுது அடைவதுடன் சுகாதார கேட்டினையும் ஏற்படுத்துகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை காலஙகளில் இதுபோன்றே நடைபெற்று வருகிறது. மேலும் தற்போது இணைக்கப்பட்டுள்ள ஐந்து கிராம பஞ்சாயத்து பகுதிகளிலும் மழைநீர் வடிகால் என்பதே இல்லாத நிலையில் உள்ளது. எனவே இம்மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை ஒரு தொழில் நுட்ப வல்லுநர் ஒருவரை நியமனம் செய்து ஆய்வு மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய கேட்டுக் கொள்ளலாம். மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மழை காலஙகளில் வெள்ளப் பெறுக்கை தடுத்து சாலைகளை பாது காக்கவும்.பொது சுகாதாரம் பாதுகாக்கவும், மழைநீர் வடிகால் அமைத்து கழிவுநீர் தேஙகாமல் இருக்க மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அத்தியாவசியமானது ஆகும். எனவே தொழில் நுட்ப வல்லுநர் ஒருவரை நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை கேட்கலாம். மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/3288/2011 | 73) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5. | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் இணைக்கப்பட்டுள்ள 5 ஊராட்சிகளான முத்தையாபுரம், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல், மீளவிட்டான் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய பகுதிகளில் புதிதாக கட்டியுள்ள வீட்டு மனைகளுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட வேண்டியதுள்ளது. ஆயினும் அரசாணை எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (தேர்தல்) நாள் 03.01.2011ல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்கனவே பின்பற்றப்பட்டு வரும் நடைமுறையின்படியே ஊராட்சிகளில் சொத்துவரி நிர்ணயம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள மேற்கண்ட ஊராட்சிகளுக்கு 2012–13ம் நிதியாண்டிற்கு ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த சொத்துவரி நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ1/16231/2009 | 74) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 6. | வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகருக்கு குடிநீர் வரும் 500mm பி.எஸ்.சி., தன்னோட்டக் குழாய், சிதம்பரநகர் (திம்மையார் காலனி) பகுதியில் உடைப்பு ஏற்பட்டதை உடனே சரிசெய்ய மாநகராட்சி செக்சன் 15ன் கீழ் ரூ.56704/– செலவு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>மதிப்பீடு எண் 315/11–12 | 75) பதிவு செய்யப்பட்டது |
| | 7. | இம்மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பக்கிள் ஓடைப்பணியில் அண்ணாநகர் 10, 11 பகுதியில் இடையூறாக உள்ள குடிநீர் குழாய்களை உடனே மாற்றியமைக்க மாநகராட்சி செக்சன் 15ன் கீழ் ரூ.325690/– செலவு செய்யப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>மதிப்பீடு எண் 200/11–12 | 76) பதிவு செய்யப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>8.</td>
<td>இம்மாநகராட்சிப் பகுதி வார்டு 3, 34, 49 மற்றும் 50 ஆகிய வார்டுகளில் சீரான குடிநீர் விநியோகம் வழங்க கோரி பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகார் அடிப்படையில் அனுமதி பெறாமல் எடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை துண்டிப்பு செய்தல் தொடர்பாக மாநகராட்சி தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை எதிர்த்து திரு.பி.எஸ்.அன்பரசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற கிளை மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P(MD) No.4897/2012 என்ற வழக்கு எண்ணில் பொது நல வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கினை அரசு வழக்கறிஞரிடம் ஒப்படைக்கவும் இவ்வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் அனுமதிக்கலாம் சி5/6572/2012</td>
<td>77) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>9.</td>
<td>சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் 2011–12ம் ஆண்டுக்கு சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டதற்குகிணங்க திறந்த வெளி கழிப்பிடங்களை தூய்மை ஆக்கும் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பிடம் கட்டுதல் மற்றும் ஏற்கனவே உள்ள பொதுக் கழிப்பிடங்களை மேம்பாட்டு பணிகள் செய்ய மதிப்பீடுகள் வழஙக கேட்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட 5 கழிப்பிடங்களை புதியதாக கட்டவும், 12 கழிப்பிடங்களை மேம்பாட்டு பணிகள் செய்யவும் ரூ. 53.05 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உள்ளது.<br><br>
<table>
<tr><th><u>வ.எண்.</u></th><th><u>பணியின் பெயர்</u></th><th></th><th><u>மதிப்பீடு (லட்சத்தில்)</u></th></tr>
<tr><td>1.</td><td>தளவாய்புரத்தில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி</td><td>–</td><td>ரூ. 4.75</td></tr>
<tr><td>2.</td><td>சில்வர்புரத்தில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி</td><td>–</td><td>ரூ. 4.75</td></tr>
<tr><td>3.</td><td>வரதராஜபுரத்தில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி</td><td>–</td><td>ரூ. 4.75</td></tr>
<tr><td>4.</td><td>திரேஸ்புரம் அண்ணா காலனியில்<br>புதிய கழிப்பிடம் கட்டும் பணி</td><td>–</td><td>ரூ. 4.75</td></tr>
<tr><td>5.</td><td>சின்னமணி நகரில் (சிலோன் காலனி)<br>புதிய கழிப்பிடம் கட்டும் பணி</td><td>–</td><td>ரூ. 7.60</td></tr>
<tr><td>6.</td><td>கிருஷ்ணராஜபுரத்தில் பொதுக் கழிப்பிடத்தில்<br>மேம்பாட்டு பணிகள் செய்ய</td><td>–</td><td>ரூ. 1.55</td></tr>
<tr><td>7.</td><td>வ.உ.சி. சந்தை பொது கழிப்பிடத்தில்<br>மேம்பாட்டு பணிகள் செய்ய</td><td>–</td><td>ரூ. 1.80</td></tr>
<tr><td>8.</td><td>தீயணைப்பு நிலைய சந்திப்பு பொது கழிப்பிடத்தில்<br>மேம்பாட்டு பணி</td><td>–</td><td>ரூ. 2.90</td></tr>
<tr><td>9.</td><td>புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள பொது<br>கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய</td><td>–</td><td>ரூ. 2.10</td></tr>
<tr><td>10.</td><td>பழைய பேரூந்து நிலைய பொதுக் கழிப்பிடத்தில்<br>மேம்பாடடு பணிகள் செய்ய</td><td>–</td><td>ரூ. 2.60</td></tr>
<tr><td>11.</td><td>தருவை விளையாட்டு மைதான பொதுக்<br>கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய</td><td>–</td><td>ரூ. 1.80</td></tr>
<tr><td>12.</td><td>திரேஸ்புரம் கடற்கரை பொது கழிப்பிடத்தில்<br>மேம்பாட்டு பணி</td><td>–</td><td>ரூ. 1.55</td></tr>
<tr><td>13.</td><td>பாத்திமா நகர் மெயின்ரோடு பொது கழிப்பிடத்தில்<br>மேம்பாட்டு பணிகள்செய்ய</td><td>–</td><td>ரூ. 2.60</td></tr>
<tr><td>14.</td><td>மில்லர்புரம் வாட்டர் டேங் பொது கழிப்பிடத்தில்<br>மேம்பாட்டு பணிகள் செய்ய</td><td>–</td><td>ரூ. 2.95</td></tr>
<tr><td>15.</td><td>டோபிகானா பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு<br>பணிகள் செய்ய</td><td>–</td><td>ரூ. 2.45</td></tr>
<tr><td>16.</td><td>ஜெயராஜ் ரோடு பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணி</td><td>–</td><td>ரூ. 1.55</td></tr>
<tr><td>17.</td><td>பனிமய நகர் பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணி</td><td>–</td><td>ரூ. 2.60</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>ரூ.53.05</td></tr>
</table>
<br>மேற்கண்ட பணிகளுக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மேற்கண்ட பணிகளுக்கு அரசு மான்யம் பெற்று பணிகள்செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/15361/201</td>
<td>78) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 10. | நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011, அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததன் பேரில் 23 சாலைப்பணிகள் செய்ய 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 29.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் சிப்பம் எண் 1க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br><br>1) திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br>2) மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ ஒப்பந்தகாரர்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை 29.03.2012 அன்று திறக்கப்பட்டு தொழில்நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தகாரர்களும் தொழில்நுட்ப ரீதியாக தகுதியுடையவர்களாக இருந்ததால் 30.03.2012 அன்று இரண்டு விலைப்புள்ளி உறைகளும் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1. திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 11.54% அதிகம்<br><br>2. மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ, ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டை விட 7.64% அதிகம்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதின் அடிப்படையில் ஒப்பந்தகாரர் மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ அவர்கள் ரூ.9314322.50 (மதிப்பீட்டை விட 3.80% அதிகம்) விலை குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/14912/2011 | 79) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 11. | நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011, அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததன் பேரில் 23 சாலைப்பணிகள் செய்ய 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 29.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் சிப்பம் எண் 2க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br><br>1) திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br>2) திரு ஆர். தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை 29.03.2012 அன்று திறக்கப்பட்டது. இதில் ஒப்பந்தகாரர் திரு. ஆர்.தங்கராஜ் அவர்கள் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை. எனவே ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை தொழில்நுட்ப ரீதியாக ரத்து செய்யப்பட்டது. மேலும் வரிசை எண் 1ல் உள்ள திரு. வி.தங்கராஜ் தூத்துக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளியை 30.03.2012 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1. திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 7.06% அதிகம்<br><br>ஒப்பந்தகாரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதின் அடிப்படையில் திரு. வி.தங்கராஜ் அவர்கள் ரூ.8567585/–க்கு (மதிப்பீட்டை விட 3.85% அதிகம்) விலைக்குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 80) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/14912/2011 | |
| | 12. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011, அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததன் பேரில் 23 சாலைப்பணிகள் செய்ய 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 29.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் சிப்பம் எண் 3க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br>1) திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br>2) திரு ஆர். தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை 29.03.2012 அன்று திறக்கப்பட்டது. இதில் ஒப்பந்தகாரர் திரு. ஆர்.தங்கராஜ் அவர்கள் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை. எனவே ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை தொழில்நுட்ப ரீதியாக ரத்து செய்யப்பட்டது. மேலும் வரிசை எண் 1ல் உள்ள திரு. வி.தங்கராஜ் தூத்துக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளியை 30.03.2012 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br>1. திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 6.39% அதிகம்<br>ஒப்பந்தகாரரின் விலைப்புள்ளி மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதின் அடிப்படையில் திரு. வி.தங்கராஜ் அவர்கள் ரூ.12416165/–க்கு (மதிப்பீட்டை விட 3.83% அதிகம்) விலைக்குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/14912/2011 | 81) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 13. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011, அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததன் பேரில் 23 சாலைப்பணிகள் செய்ய 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 29.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் சிப்பம் எண் 4க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br>1) திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br>2) மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ, ஒப்பந்தகாரர்<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை 29.03.2012 அன்று திறக்கப்பட்டு தொழில்நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தகாரர்களும் தொழில்நுட்ப ரீதியாக தகுதியுடையவர்களாக இருந்ததால் 30.03.2012 அன்று இரண்டு விலைப்புள்ளி உறைகளும் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br>1. திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 11.52% அதிகம்<br>2. மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ, ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டை விட 7.77% அதிகம் | 82) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதின் அடிப்படையில் ஒப்பந்தகாரர் மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ அவர்கள் ரூ.12052012.50 (மதிப்பீட்டை விட 3.80% அதிகம்) விலை குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/14912/2011 | |
| 14. | நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011, அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததன் பேரில் 23 சாலைப்பணிகள் செய்ய 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 29.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் சிப்பம் எண் 5க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br><br>1) திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர்<br>2) மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ ஒப்பந்தகாரர்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை 29.03.2012 அன்று திறக்கப்பட்டு தொழில்நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தகாரர்களும் தொழில்நுட்ப ரீதியாக தகுதியுடையவர்களாக இருந்ததால் 30.03.2012 அன்று இரண்டு விலைப்புள்ளி உறைகளும் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1. திரு வி. தங்கராஜ், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 11.48% அதிகம்<br>2. மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ, ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டை விட 7.81% அதிகம்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதின் அடிப்படையில் ஒப்பந்தகாரர் மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ அவர்கள் ரூ.9235865/– (மதிப்பீட்டை விட 3.86% அதிகம்) விலை குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/14912/2011 | 83) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| 15. | நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011, அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததன் பேரில் 3மழைநீர் வடிகால்பணி செய்ய 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 09.04.2012 அன்று மறுஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் சிப்பம் எண் 1 வடிகால் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.<br><br>1) திரு ஐ. ஜெயசீலன், ஒப்பந்தகாரர்<br>2) திரு.எஸ். இன்னாசிமுத்து, ஒப்பந்தகாரர்<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு தொழில்நுட்ப கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தகாரர்களும் தொழில்நுட்ப ரீதியாக தகுதியுடையவர்களாக இருந்ததால் 18.04.2012 அன்று இரண்டு விலைப்புள்ளி உறைகளும் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. | 84) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. திரு ஐ. ஜெயசீலன் ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 10.03% அதிகம்<br>2. திரு.எஸ். இன்னாசிமுத்து, ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டை விட 9.20% அதிகம்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்துபுள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அதின் அடிப்படையில் ஒப்பந்தகாரா் திரு.எஸ். இன்னாசிமுத்து, அவா்கள் ரூ.10657085.00 (மதிப்பீட்டை விட 4.99% அதிகம்) விலை குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/14912/2011 | |
| | 16. இம்மாநகராட்சி பகுதி குரூஸ்புரத்தில் சமூதாய நலக்கூடம் கட்டும் பணிக்கு மாமன்ற கூட்ட பொருள் எண்.25 நாள் 31.01.2012. அன்று திருத்திய மதிப்பீட்டிற்கு நிா்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 09–04–2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள்<br>1. திரு.எஸ்.இன்னாசிமுத்து, ஒப்பந்தக்காரா் — மதிப்பீட்டை விட 9.40 % அதிகம்<br>2. திரு. ஐ. ஜெயசீலன் ஒப்பந்தக்காரா் — மதிப்பீட்டை விட 8.84% அதிகம்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரா்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது. இதில் திரு. ஐ. ஜெயசீலன் அவா்கள் ரூ.3066158.00க்கு (மதிப்பீட்டை விட 4.96% அதிகம்) விலைக்குறைப்பு கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண்.272/2008–09 | 85) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 17. சென்னை, நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் கடிதத்தில் 2012–13ம் ஆண்டுக்கு சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டதற்குகிணஙக திறந்த வெளி கழிப்பிடங்களை தூய்மை ஆக்கும் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பிடம் கட்டுதல் மற்றும் ஏற்கனவே உள்ள பொதுக் கழிப்பிடங்களை மேம்பாட்டு பணிகள் செய்ய மதிப்பீடுகள் வழங்க கேட்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட 5 கழிப்பிடங்களை புதியதாக கட்டவும், 12 கழிப்பிடங்களை மேம்பாட்டு பணிகள் செய்யவும் ரூ. 53.05 லட்சத்தில் மதிப்பீடு தயாா் செய்யப்பட்டு உள்ளது.<br><br>**<u>வ.எண்.</u>** — **<u>பணியின் பெயா்</u>** — **<u>மதிப்பீடு (லட்சத்தில்)</u>**<br>1. லேபா் காலனியில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி – ரூ. 4.75<br>2. தஙகம்மாள்புரத்தில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி – ரூ. 4.75<br>3. காதா்மீரான் நகரில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி – ரூ. 4.75<br>4. செல்சீனி காலனியில் புதிய கழிப்பிடம் கட்டும் பணி – ரூ. 4.75<br>5. சின்னமணி நகரில் (சிலோன் காலனி) புதிய கழிப்பிடம் கட்டும் பணி – ரூ. 7.60<br>6. அழகேசபுரம் (விவிடி டேங்க்) பொதுக் கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய – ரூ. 2.10<br>7. அம்பேத்கார் நகர் பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய – ரூ. 2.60<br>8. எரிமேடை பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணி – ரூ. 1.55 | 86) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 9. DSF சந்திப்பில் உள்ள பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய – ரூ. 2.90<br>10. லெவிஞ்சிபுரம் பொதுக் கழிப்பிடத்தில் மேம்பாடடு பணிகள் செய்ய – ரூ. 1.80<br>11. முத்தையாபுரம் 60அடி சாலை பொதுக் கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய – ரூ. 2.60<br>12. நாடார் தெரு பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணி – ரூ. 1.55<br>13. புதுக்காலனி மெயின்ரோடு பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள்செய்ய – ரூ. 2.95<br>14. சுப்பையா பூங்கா பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய – ரூ. 2.45<br>15. டி.எம்.பி. காலனி பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் செய்ய – ரூ. 1.55<br>16. WGC ரோடு பொது கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணி – ரூ. 1.80<br>17. ராஜாஜி பூங்கா பொது கழிப்பிடத்தில மேம்பாட்டு பணி – ரூ. 2.60<br>------------<br>**மொத்தம் – ரூ.53.05**<br>------------<br><br>மேற்கண்ட பணிகளுக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட பணிகளுக்கு அரசு மான்யம் பெற்று பணிகள்செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/6979/12 | |
| | 18. இம்மாநகராட்சி பகுதியான கிருஷ்ணராஜபுரம் 10வது வார்டுக்கு உட்பட்ட மெயின் ரோட்டில் அமைந்து இருக்கும் மிகப்பழமையான ஓலை வேய்ந்த நிழற்குடையை தனது சொந்த செலவில் கான்கிரீட் போட்டு 9 x 7 அளவில் மேற்படி பயணிகள் நிழற்குடையை அமைத்து சொந்த செலவில் அதனை தொடர்ந்து பராமரித்து வருவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டு மனுதாரர் திருமதி. ஏ.பி.ஆர். அந்தோணிகிரேஸ் அவர்கள் மாநகராட்சி அலுவலகத்திற்கு 26.04.2012ல் மனு சமர்ப்பித்துள்ளார்.<br><br>எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி மனுதாரர் திருமதி ஏ.பி.ஆர்.அந்தோணி கிரேஸ் அவர்களுக்கு மேற்படி நிழற்குடையை சொந்த செலவில் அமைத்து தொடர்ந்து பராமரிப்பு செய்து வருவதற்கு அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** 1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் நேரடி பார்வையில் பணிகள் நடைபெற வேண்டும் என்று மனுதாரருக்கு நிபந்தனை விதிக்கலாம்.<br>இ5/2050/2012 | 87) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| | 19. இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ரோச் பூங்காவில் வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (2009–2010 முதல் 2011–2012) பெற்று திரு. இ.பாஸ்கரன் என்பவர் நடத்தி வருகிறார். மேற்படி இனத்திற்கான உரிம காலம் 31.03.2012ல் முடிவு பெறுவதால் அரசாணை எண் 92 நாள் 31.03.2007ன்படி கடந்த ஆண்டு குத்தகையை விட 15 சதவிகிதம் உயர்வு செய்து அதன் உரிம காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். எனவே கடந்த மூன்று உரிமத் தொகையான ரூ.85000/–இல் 15 சதவீதத் தொகை ரூ.12750/– சேர்த்து ஆக மொத்தம் ரூ.97750/– (வருடத்திற்கு) செலுத்தவும் அன்னாருக்கு மேற்படி உரிமத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து (2012–2013 முதல் 2014–2015 வரை) மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/11087/2009 | 88) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

20. இம்மாநகராட்சியால் தொடரப்படும் வழக்குகள் மற்றும் இம்மாநகராட்சி மீது தொடரப்படும் வழக்குகளை இம்மாநகராட்சி சார்பாக ஏற்று நடத்தவும், மாநகராட்சி சட்ட சம்பந்தமான ஆலோசனைகள் பெறவும், மாநகராட்சி நடைமுறை விதிகளின்படி நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. என்.செல்வராஜ்,பி.எஸ்சி.,பி.எல்., அவர்களின் 5 ஆண்டு பதவிக்காலம் 31.05.2012ல் முடிவடைகிறது. தொடர்ந்து இம்மாநகராட்சிக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்ய கீழ்க்காணும் வழக்கறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

1) திரு. ஏ. கோமதி மணிகண்டன்
2) திரு. பி. ஆறுமுக வேலன்
3) திருமதி சி. எழில்மேரி
4) திரு. சி. மந்திரமூர்த்தி
5) திரு ஜி. ராபின் சித்தரஞ்சன்

வரப்பெற்ற விண்ணப்பங்களை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் முடிவு செய்யலாம்.

சி1/13512/04

89) மாமன்ற வழக்கறிஞராக திரு ஏ.கோமதி மணிகண்டன் அவர்களை நியமனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

---

21. இம்மாநகராட்சி உயர்நீதிமன்ற வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்ட திரு. எஸ்.கடற்கரை,B.Sc.,B.L., அவர்களின் பதவிக்காலம் 31.05.2012ல் முடிவு பெற உள்ளது. இந்நிலையில் திரு எஸ்.ஷாஜிபினோ,B.Sc.,BL., என்ற வழக்கறிஞர் தன்னை மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞராக நியமனம் செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் முடிவு செய்யலாம்.

சி1/7147/2007

90) மாமன்ற உயர்நீதிமன்ற வழக்கறிஞராக திரு எஸ்.ஷாஜிபினோ அவர்களை நியமனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

---

22. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் இணைக்கப்பட்டுள்ள 5 ஊராட்சிகளான முத்தையாபுரம், சஙகரப்பேரி, தூத்துக்குடி ரூரல், மீளவிட்டான், மற்றும் அத்திரப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள காலிமனைகளுக்கு காலிமனை வரி நிர்ணயம் செய்யப்படவேண்டியதுள்ளது. தற்போது மாநகராட்சி புதிதாக சீரமைக்கப்பட்ட 40 (பழைய வார்டு எண்ணிக்கை 51) வார்டுகளிலும் அரசாணை எண் 1 51 நாள் 20.08.2009 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறையில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின் படி மாமன்ற தீர்மான எண் 189/16.10.2009–ல் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஒரு சதுர அடிக்கு காலிமனை வரியாக (அரையாண்டிற்கு)

1) ‘‘அ’’ மண்டலத்திற்கு 0.40 பைசா எனவும்
2) ‘‘ஆ’’ மண்டலத்திற்கு 0.50 பைசா எனவும்
3) ‘‘இ’’ மண்டலத்திற்கு 0.60 பைசா எனவும்

தீர்மானிக்கப்பட்டு தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. இது போல் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 5 ஊராட்சிகளிலும் இணைப்பில் கண்ட அட்டவணையில் கண்டுள்ள தெருக்களும் மூன்று பகுதிகாளக பிரித்து மண்டலத்தின் அடிப்படையில்

‘‘அ’’ மண்டலத்திற்கு 0.40 பைசா எனவும்
‘‘ஆ’’ மண்டலத்திற்கு 0.50 பைசா எனவும்
‘‘இ’’ மண்டலத்திற்கு 0.60 பைசா எனவும் காலிமனை வரி நிர்ணயம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**காலியிட வரி மண்டலம் (அ)**

| வார்டு எண் | வரிசை எண் | தெருக்களின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | ஜோதி நகர் |
| | 2 | மச்சாது நகர் |

91) அலுவலகக் குறிப்புப்படி காலிமனைவரி நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 3 | பண்டாரம்பட்டி | | |
| | | | 4 | மூள்ளி குளம் | | |
| | | | 5 | ராம நாத புரம் | | |
| | | | 6 | சஙகரப்பேரி | | |
| | | | 7 | சுப்பிரமணியபுரம் | | |
| | | | 8 | கஙகா பரமேஸ்வரி காலணி | | |
| | | 2 | | இல்லை | | |
| | | 3 | 1 | மீளவிட்டான் | | |
| | | | 2 | சில்வர்புரம் | | |
| | | | 3 | பாலையாபுரம் | | |
| | | | 4 | வி.எம்.எஸ்.நகர் | | |
| | | | 5 | சின்னக்கண்ணுபுரம் | | |
| | | | 6 | மகிழ்ச்சிபுரம் | | |
| | | | 7 | ராஜகோபால்நகர் | | |
| | | | 8 | பர்மா காலனி | | |
| | | | 9 | செல்வ விநாயக நகர் | | |
| | | | 10 | ராஜீவ் நகர் | | |
| | | | 11 | பாக்கிய லட்சுமி நகர் | | |
| | | | 12 | பாரதி நகர், ராஜீவ் நகர் வடக்கு | | |
| | | | 13 | அன்னை தெரசா நகர் | | |
| | | 5 | 1 | தளவாய்புரம் | | |
| | | | 2 | காமராஜ் நகர் | | |
| | | 17 | 1 | கீழ அலஙகாரத் தட்டு | | |
| | | | 2 | மேல அலஙகாரத் தட்டு | | |
| | | | 3 | லசால் நகர் | | |
| | | | 4 | கோயில் பிள்ளை விளை | | |
| | | | 5 | தந்தை பெரியார் நகர் | | |
| | | | 6 | அன்னை திரேச மீனவர் காலணி | | |
| | | | 7 | ஜான் சேவியர் மினவர் காலணி | | |
| | | | 8 | திருவள்ளுவர்புரம் | | |
| | | | 9 | கல்வாரி நகர் | | |
| | | 18 | 1 | சிவராஜபுரம் | | |
| | | | 2 | கலைஞர் நகர் | | |
| | | | 3 | ஜீவா நகர் | | |
| | | | 4 | ராஜீவ் காந்தி நகர் | | |
| | | | 5 | மேட்டுப்பட்டி | | |
| | | | 6 | முத்திரையர் மீனவர் காலணி | | |
| | | | 7 | விவேகானந்தா காலணி | | |
| | | | 8 | சஙகுகுழி காலணி | | |
| | | 34 | 1 | மடத்தூர் | | |
| | | | 2 | துரைகனி நகர் | | |
| | | | 3 | திரவிய ரத்தின நகர் | | |
| | | | 4 | டைமண்ட் காலனி | | |
| | | | 5 | பி.எண்.டி. காலணி( ஆசிர்வாத நகர்) | | |
| | | | 6 | பி.எண்.டி.காலணி | | |
| | | | 7 | கதிர்வேல் நகர் | | |
| | | | 8 | ஏழுமலையான் நகர் | | |
| | | | 9 | இ.பி.காலணி | | |
| | | | 10 | விஷ்ணுபுரி | | |
| | | | 11 | கோக்கூர் | | |
| | | | 12 | மடத்தூர் சோரிஸ்புரம் | | |
| | | | 13 | முருகேசன் நகர் | | |
| | | | 14 | கல்லூரி நகர் | | |
| | | | 15 | முத்து நகர் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 16 | நியூ சுந்தரம் நகர் | | |
| | | 48 | 1 | இந்திரா நகர் | | |
| | | | 2 | திரு.வி.க.நகர் | | |
| | | | 3 | கணேசன் காலனி | | |
| | | | 4 | குருவி மேடு | | |
| | | | 5 | சாந்தி நகர் | | |
| | | | 6 | சக்தி நகர் | | |
| | | | 7 | எஸ்.எஸ்.நகர் | | |
| | | 49 | 1 | கருணாநிதி நகர் | | |
| | | | 2 | வள்ளி நாயகபுரம் | | |
| | | 50 | 1 | 3 செண்ட் அந்தோணியார்புரம் புதுக் குடியிருப்பு | | |
| | | | 2 | சத்யா நகர் | | |
| | | | 3 | பெரியசாமி நகர் | | |
| | | | 4 | முடுக்குகாடு | | |
| | | | 5 | எம்.ஜி.ஆர். நகர் | | |
| | | | 6 | ராஜபாண்டி நகர் | | |
| | | | 7 | அருணா நகர் | | |
| | | 51 | 1 | வீரநாயக்கன் தட்டு | | |
| | | | 2 | ஊரணி ஒத்த வீடு | | |
| | | | 3 | முத்து நகர் | | |
| | | | 4 | காதர் மீரான் நகர் | | |
| | | | 5 | கோயில் பிள்ளை நகர் | | |
| | | 52 | 1 | முத்தையாபுரம் (நடுத் தெரு,தெற்குத் தெரு, அம்மன் கோவில் தெரு, நாடார் தெரு) | | |
| | | | 2 | அய்யன் கோவில் தெரு | | |
| | | | 3 | கிருஷ்ணாநகர் | | |
| | | | 4 | பேரின்ப நகர் | | |
| | | | 5 | தோப்புத் தெரு | | |
| | | | 6 | முஸ்லிம் தெரு | | |
| | | | 7 | பொன்னான்டி தெரு | | |
| | | | 8 | மேலத் தெரு | | |
| | | | 9 | சூசை நகர் | | |
| | | 53 | 1 | முனியசாமி கோவில் தெரு | | |
| | | | 2 | வடக்குத் தெரு | | |
| | | | 3 | கிழக்குத் தெரு | | |
| | | | 4 | அருந்ததியர் தெரு | | |
| | | | 5 | பெரியார் நகர் | | |
| | | | 6 | பெரியார் தெரு | | |
| | | | 7 | முஸ்லிம் தெரு | | |
| | | 54 | 1 | தஙகம்மாள் புரம் | | |
| | | | 2 | சண்முகபுரம் | | |
| | | | 3 | சுந்தர் நகர் | | |
| | | | 4 | சுந்தரம் நகர் | | |
| | | | 5 | ஜே. எஸ்.நகர் | | |
| | | | 6 | வீரபாண்டிய நகர் | | |
| | | 55 | 1 | பாரதி நகர் | | |
| | | | 2 | சாந்தி நகர் | | |
| | | | 3 | சுபாஸ் நகர் | | |
| | | | 4 | குமாரசாமி நகர் | | |
| | | | 5 | எழில் நகர் | | |
| | | | 6 | வ.உ.சி.நகர் | | |
| | | | 7 | தவசி பெருமாள் சாலை | | |
| | | 56 | 1 | அத்திமரப்பட்டி | | |
| | | | 2 | சண்முகபுரம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3 | பொன்நகர் | |
| | | 57 | 1 | கீதா நகர் | |
| | | | 2 | ஆதிபராசக்தி நகர் | |
| | | | 3 | சக்தி நகர் | |
| | | | 4 | மகா நகர் | |
| | | | 5 | சுந்தர்ராஜ் நகர் | |
| | | | 6 | தஙகமணி நகர் | |
| | | | 7 | அம்பேத்கர்நகர் | |
| | | | 8 | அண்னை தெரசா நகர் | |
| | | | 9 | குமாரசாமி நகர்(மற்றும்) குறுக்குத் தெரு | |
| | | | 10 | தென்றல் நகர் | |
| | | | 11 | சந்தோஷ் நகர் | |
| | | | 12 | பால சஙகர் நகர் | |
| | | 58 | 1 | காந்தி நகர் | |
| | | | 2 | இந்திராநகர் | |
| | | | 3 | நேசமணி நகர் | |
| | | | 4 | பாலாஜிநகர் | |
| | | | 5 | சுவாமி நகர் | |
| | | | 6 | காமராஜ்நகர் | |
| | | | 7 | நேருஜி நகர் | |
| | | | 8 | பார்வதிபுரம் | |
| | | | 9 | கக்கன்ஜி நகர் | |
| | | | 10 | கணேஷ் நகர் | |
| | | | 11 | சந்தோசம் நகர் | |
| | | 59 | 1 | அபிராமி நகர் | |
| | | | 2 | அபிராமி நகர் (காமராஜ் நகர்) | |
| | | | 3 | எம்.சவேரியார்புரம் | |
| | | | 4 | ராஜீவ் நகர் | |
| | | 60 | 1 | சுணாமி குடியிருப்பு | |
| | | | 2 | லேபர் காலணி | |

**காலியிட வரி மண்டலம் (ஆ)**

| வார்டு எண் | வரிசை எண் | தெருக்களின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | காசிராஜன் காலணி |
| | 2 | மதுரை பைபாஸ் ரோடு |
| | 3 | அய்யாசாமி காலணி |
| | 4 | ஆதிபராசத்தி நகர் |
| 2 | 1 | அன்னை இந்திரா நகர் |
| | 2 | தேவர் காலணி |
| | 3 | ஐயப்பன் நகர் |
| | 4 | நேதாஜி நகர் |
| | 5 | விஸ்வ புரம் |
| | 6 | யோகிஸ்வரர் காலணி |
| **3** | 1 | பால்பாண்டி நகர் |
| | 2 | மில்லர்புரம் ஹவுசிஙபோர்டு |
| | 3 | சந்திரசேகர் நகர் |
| | 4 | நிகிலேசன் நகர் |
| | 5 | ஹரிராம் நகர் |
| | 6 | காந்தி நகர் |
| | 7 | புஸ்பா நகர் |
| | 8 | எஸ்.பி.எம் நகர். |

| | | |
|---|---|---|
| | 9 | மதுரை பைபாஸ் ரோடு |
| | 10 | ஹார்பார் பைப்பாஸ்ரோடு |
| | 11 | முத்துகிருஷ்ணாபுரம் |
| | 12 | ராஜரத்தின நகர் |
| 5 | 1 | ஓம் சாந்தி நகர் |
| | 2 | கே.டி.சி.நகர் |
| 17 | 1 | பாக்கிய நாதன் விளை |
| | 2 | அய்யர் விளை |
| | 3 | பொன்சுப்பையா நகர் |
| | 4 | தஸ்நேவிஸ் நகர் |
| | 5 | லட்சுமி புரம் |
| 18 | 1 | லூர்தம்மாள் புரம் |
| | 2 | கிருஷ்ணராஜபுரம் |
| | 3 | இந்திரா நகர் |
| **34** | 1 | சிப்காட் வளாகம் |
| | 2 | சர்வேயர் காலணி |
| | 3 | மடதூர் பை பாஸ் ரோடு |
| | 4 | சிவ ஜோதி நகர் |
| **48** | 1 | அமுதா நகர் |
| | 2 | முனிய சாமி நகர் |
| **49** | 1 | கால்டுவெல் காலணி |
| | 2 | சிவந்தாகுளம் |
| | 3 | ராஜிவ் காந்தி நகர் |
| **50** | 1 | கோட்ஸ் நகர் |
| | 2 | செல்சினி காலணி |
| | 3 | கௌசல்யா புரம் |
| **51 முதல் 60 வரை** | | இல்லை |

**காலியிட வரி மண்டலம் (இ)**

| வார்டு எண் | வரிசை எண் | தெருக்களின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | தனசேகர் நகர் |
| | 2 | ரஹமத் நகர் |
| | 3 | ராம் நகர் |
| 2 | | இல்லை |
| **3** | | இல்லை |
| 5 | 1 | முத்தம்மாள் காலணி |
| | 2 | எட்டையாபுரம் ரோடு |
| | 3 | தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் |
| | 4 | ஸ்டேட் பேங்க் காலணி |
| 17 | 1 | செயிண்ட் மேரிஸ் காலணி |
| | 2 | தாம்சன் காலணி |
| 18 | | இல்லை |
| **34** | | இல்லை |
| **48** | 1 | என்.ஜி.ஓ. காலணி |
| | | கிருபை நகர் |

| | | |
|---|---|---|
| **49** | 1 | காமராஜ் நகர் |
| | 2 | எஸ்.என்.ஆர். நகர் |
| | 3 | சி.ஜி.இ. குாலணி |
| | 4 | சக்தி விநாயகர் நியூசால்ட் காலணி |
| **50** | 1 | இல்லை |
| **51** | 1 | துறைமுக எக்ஸ்பிரஸ் ரோடு |
| **52** | 1 | திருச்செந்தூர்–தூத்துக்குடி மெயின்ரோடு (சாண்டி கம்பேனி அருகில் இருந்து பல்க் ரவுண்டானா முடிய |
| | 2 | துறைமுகம் கட்டுமான சாலை (ஸ்பிக் கேட் முதல் டாக் கேட் வரை) |
| **53** | 1 | திருச்செந்தூர் மெயின் ரோடு ( உப்பாத்து ஓடை முதல் சான்டி அன் கோ வரை) |
| | 2 | தெர்மல் நகர் குடியிருப்பு 1 |
| **54** | 1 | ஸ்பிக் நகர் |
| | 2 | அத்திமரப்பட்டி ரோடு ( அத்திமரப்பட்டி விலக்கு முதல் இசக்கி அம்மன் கோவில் வரை) |
| | 3 | தூத்துக்குடி திருச்செந்தூர் சாலை (பல்க் ரவுண்டாணா முதல் அத்திமரப்பட்டி விலக்கு முடிய) |
| | 4 | துறைமுக கட்டுமான சாலை (பல்க் ரவுண்டானா முதல் ஸ்பிக் தொழிற்சாலை கேட் வரை) |
| 55 | 1 | திருச்செந்தூர்–தூத்துக்குடி சாலை ( அத்திமரப்பட்டி விலக்கு முதல் டாக் குடியிருப்பு கேட் முடிய) |
| | 2 | அத்திமரப்பட்டி ரோடு ( அத்திமரப்பட்டி விலக்கு முதல் இசக்கி அம்மன் கோவில் வரை) |
| 56 | | இல்லை |
| 57 | 1 | திருச்செந்தூர் –தூத்துக்குடி சாலை ( டாக் குடியிருப்பு கேட் முதல் எம்.சவேரியார்புரம் வரை) |
| 58 | 2 | திருச்செந்தூர் சாலை ( எம்.சவேரியார்புரம் முதல் நேசமணி நகர் வரை) |
| 59 | 1 | ஸ்பிக் குடியிருப்பு |
| | 2 | டாக் குடியிருப்பு |
| **60** | 1) | புதிய துறைமுக குடியிருப்பு |
| | 2) | புதிய துறைமுக தற்காலிக குடியிருப்பு |
| | 3) | தெர்மல் நகர் 2 |
| | 4) | துறைமுக கட்டுமான சாலை (டாக் செக் போஸ்ட் முதல் துறைமுகம் வரை) |

**அலுவலக குறிப்பு :**

''அ'' மண்டலத்திற்கு 0.40 பைசா எனவும்

''ஆ'' மண்டலத்திற்கு 0.50 பைசா எனவும்

''இ'' மண்டலத்திற்கு 0.60 பைசா எனவும் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 5 ஊராட்சிகளிலும் இணைப்பில் கண்ட அட்டவணையில் கண்டுள்ள தெருக்களும் மூன்று பகுதிகளாக பிரித்து மண்டலத்தின் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கணக்கீட்டின் படி காலிமனை வரி நிர்ணயம் செய்யலாம்

அ1/16231/2009

| | | | |
|---|---|---|---|
| | 23. | தூத்துக்குடி மாநகராட்சியுடன் தூத்துக்குடி ரூரல், மீளவிட்டான், அத்திமரப்பட்டி, சங்கரப்பேரி, முத்தையாபுரம் ஆகிய 5 ஊராட்சிகள் இணைந்து உள்ளாட்சி தேர்தலுக்குப் பின் தூத்துக்குடி மாநகராட்சி ஒருங்கிணைந்த மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. | 92) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

தூத்துக்குடி மாநகராட்சி ஒருங்கிணைந்த மாநகராட்சியாக செயல்பட்டு வரும் நிலையில் மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால் மாநகராட்சிக்கு புதிதாக பணியிடங்கள் தோற்றுவிக்க அரசின் அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. தற்போது இணைக்கப்பட்டுள்ள ஊராட்சிப் பகுதிகளில் அடிப்படை தேவைகளான குடிநீர் வழங்குதல், சுகாதார பணிகள் மேற்கொள்ளுதல் தெருவிளக்கு பராமரித்தல் போன்ற பணிகளை செய்ய மேற்படி ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் விபரப்பட்டியலை தூத்துக்குடி வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து பெறப்பட்டு மேற்படி ஊராட்சிகளில் பணிபுரியும் 109 பணியாளர்களை மாநகராட்சிப் பணியுடன் இணைத்து அவர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்க தூத்துக்குடி மாமன்றத்தின் 29.12.2011ம் தேதிய 506ம் எண் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி 109 பணியாளர்களில் 88 பணியாளர்கள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்நிலையில் மாமன்ற துணை மேயர் அவர்களின் 26.03.2012ம் தேதிய கடிதத்தில் தூத்துக்குடி ரூரல் பகுதியில் பம்ப் இயக்குபவர்களாக 2 பணியாளர்கள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருவதாகவும் மேற்படி இரண்டு பணியாளர்களையும் மாநகராட்சி பணியுடன் இணைக்க கோரியுள்ளார்கள். அதே போன்று முத்தையாபுரம் தெற்கு மண்டல தலைவர் தனது 14.03.2012ம் தேதிய கடிதத்தில் முத்தையாபுரம் ஊராட்சியில் 24 பணியாளர்கள் சுகாதார பணி மேற்பார்வையாளர், சுகாதார பணியாளர்கள், பம்ப் ஆப்ரேட்டர், தெருவிளக்கு பராமரிப்பவர், தெருவிளக்கு இயக்குபவர் ஆக மொத்தம் 24 பணியாளர்கள் பணிபுரிந்து வருவதாகவும் அவர்களையும் மாநகராட்சிப் பணியுடன் இணைக்கக் கோரியுள்ளார்.

தற்போது மாநகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையில் மேற்படி இரண்டு ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் பணி விபரப்பட்டியலை கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் தூத்துக்குடி வட்டார வளர்ச்சி அலுவலரின் 20.04.2012ம் தேதிய ந.க.எண் தி3/4319/2008ம் தேதிய கடிதத்துடன் தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் ஊராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் விபரப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அதில் குறிப்பிட்ட 26 பணியாளர்களும் தொகுப்பூதியத்தில் ஊதியம் பெற்று வருகிறார்கள். எனவே மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளில் பணிபுரியும் 26 பணியாளர்களையும் மாநகராட்சிப் பணியுடன் இணைக்க பணியிட அனுமதி பெற அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட மாநகராட்சிக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையிலும், மேற்படி பணியாளர்களின் பணி ஊராட்சிப் பகுதிகளுக்கு தேவைப்படுவதாலும் மாநகராட்சியில் புதியதாக பணியிடம் தோற்றுவிக்க அரசின் அனுமதி வரப்பெறாத நிலையில் மேற்படி 26 பணியாளர்களுக்கு தற்காலிகமாக மாதாந்திர ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் இவர்கள் அக்டோபர் 2011 மாதத்திலிருந்து ஊதியம் பெறவில்லை. எனவே இவர்களுக்கு அக்டோபர் 2011ல் இருந்து மாத ஊதியம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தூத்துக்குடி ரூரல்</u>**

| வ. எண் | பணியாளரின் பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணி நியமன உத்திரவு எண் & நா |
|---|---|---|---|
| 1. | சே. ஆல்வின், பம்ப் இயக்குநர் | 03.03.2010 | தூத்துக்குடி ரூரல் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 29/2011–12, 03.03.2010 |
| 2. | எஸ். ஆஸ்வால்ட், பம்ப் இயக்குநர் | 03.03.2010 | தூத்துக்குடி ரூரல் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 29/2011–12, 03.03.2010 |

**முத்தையாபுரம் கிராம ஊராட்சி**

| வ. எண் | பணியாளரின் பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணி நியமன உத்திரவு எண் & நாள் |
|---|---|---|---|
| 1. | ரா. செண்பகபாண்டியன், சுகாதாரப்பணி மேற்பார்வையாளர் | 01.08.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 52/2011–12, 30.07.11 |
| 2 | ச. ஜெயபால், சுகாதாரப்பணி மேற்பார்வையாளர் | 01.08.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 53/2011–12, 30.07.11 |
| 3. | பெ.பச்சைபெருமாள், சுகாதாரப்பணி மேற்பார்வையாளர் | 01.08.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 54/2011–12, 30.07.11 |
| 4. | மு. கருப்பி, சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 65/2011–12, 16.09.11 |
| 5. | சு. வள்ளி, சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 66/2011–12, 16.09.11 |
| 6. | க. பஞ்சவர்ணம், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 67/2011–12, 16.09.11 |
| 7. | மா. ஈஸ்வரி, சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 68/2011–12, 16.09.11 |
| 8. | பி. சுப்பம்மாள், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 69/2011–12, 16.09.11 |
| 9. | மா.பச்சையம்மாள், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 70/2011–12, 30.07.11 |
| 10. | ரா. சந்தனமாரி, சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 71/2011–12, 16.09.11 |
| 11. | சு. முருகன், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 72/2011–12, 16.09.11 |
| 12. | ந. மாயிருளன், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 73/2011–12, 16.09.11 |
| 13. | க. சுடலைமாடன், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 74/2011–12, 16.09.11 |
| 14. | கா. லெட்சுமணன், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 75/2011–12, 16.09.11 |
| 15. | சு. சித்திரைவேல், சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 76/2011–12, 16.09.11 |
| 16. | அ. மந்திரமூர்த்தி, சுகாதாரப்பணியாளர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 77/2011–12, 16.09.11 |
| 17. | ரா. முருகன், தெருவிளக்கு பராமரிப்பவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 78/2011–12, 16.09.11 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | கா. உலகமுத்து,<br>தண்ணீர் திறப்பவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 80/2011–12, 16.09.11 | | 600/– |
| 19. | ச.நிஷார்,<br>தண்ணீர் திறப்பவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 79/2011–12, 16.09.11 | | 600/– |
| 20. | ரா. மகாராஜன்,<br>தண்ணீர் திறப்பவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 81/2011–12, 16.09.11 | | 600/– |
| 21 | மு. கதிரவன்,<br>தண்ணீர் திறப்பவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 82/2011–12, 16.09.11 | | 600/– |
| 22. | சி. சக்திவேல்,<br>தண்ணீர் திறப்பவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 83/2011–12, 16.09.11 | | 600/– |
| 23. | செ. பாலமுருகன்,<br>தண்ணீர் திறப்பவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 84/2011–12, 16.09.11 | | 600/– |
| 24. | கு. ராஜா சங்கரவேல்,<br>தெருவிளக்கு இயக்குபவர் | 01.09.2011 | முத்தையாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரின் நடவடிக்கைகள் எண் 85/2011–12, 16.09.11 | | 600/– |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் ஊராட்சிகளில் பணிபுரியும் 26 பணியாளர்களை மாநகராட்சிப் பணியுடன் இணைக்க அரசுக்கு பிரேரணை அனுப்பி அனுமதி பெறலாம்.
2) மேலும், மேற்படி 26 பணியாளர்களுக்கும் தற்காலிகமாக மாதாந்திர ஊதியம் வழங்கலாம்.

சி1/13473/2011

| | | | |
|---|---|---|---|
| | 24. | இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி இரயில்வே நிலையங்களுக்கு இடையே இரயில்வே கடவு எண் 486 (இரண்டாம் ரயில்வே கேட்) மற்றும் கடவு எண் 487ல் (முதலாம் ரயில்வே கேட்) இரண்டு இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு அரசு ஆணை எண் 272 நெடுஞ்சாலை (எச்.க்யூ2) துறை நாள் 13.11.07ல் ரூ.2750.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்பாக சென்னை, நெடுஞ்சாலை திட்டங்கள் தலைமைப் பொறியாளர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஆய்வு மற்றும் வடிவமைப்பு இணை தலைமைப் பொறியாளர் ஆகியோர் இடத்தினை ஆய்வு செய்து கடவு எண் 486ல் (இரண்டாவது இரயில்வே கேட்) இரயில்வே மேம்பாலமும், கடவு எண் 487ல் (முதலாம் இரயில்வே கேட்) அளவான பயன்பாடு கீழ்பாலம் (Limited use subway) கட்டலாம் என கருத்து தெரிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் மாநகராட்சி மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் கருத்துருவுகளை கேட்டறிந்து தீர்மானத்துடன் அனுப்பி வைக்குமாறு நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள் கோட்டப்பொறியாளர், திருநெல்வேலி கடிதம் எண் எல்சி எண் 486 & 487. 2009 வ.தொ.அ/19.03.2009 தேதிய கடிதத்தில் கோரப்பட்டது. நில ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் மற்றும் கட்டிட நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடு தொகை நெடுஞ்சாலைத்துறையினரால் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடவு எண் 486ல் மேம்பாலம் மற்றும் கடவு எண் 487ல் அளவான பயன்பாடு கீழ்பாலம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டது.<br><br>மாமன்றம் தீர்மான எண் 49 நாள் 26.02.2010ல் முதலாம் இரயில்வே கேட்டில் உபயோக கீழ்ப்பாலம் அமைத்தால் நிலப்பரப்பின் சில அடி ஆழத்தில் நிலத்தடி நீர் காணப்படுவதால் நிலத்தடிநீர், உட்புகுந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும். மேலும் மழைக்காலங்களில் மழைநீர் பெருமளவில் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுவதோடு மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படாத வகையில் அமைந்து விடுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாலும், இரண்டாம் இரயில்வே கேட்டில் மேம்பாலம் அமைத்தால் குறுகிய பகுதியாக காணப்படுவதால் போக்குவரத்திற்கு | 93) நவீன தொழில்நுட்ப முறையில் கடவு எண் 486 (இரண்டாம் இரயில்வே கேட்) பகுதியில் மேம்பாலமும் கடவு எண் 487 (முதலாம் இரயில்வே கேட்) பகுதியில் அளவான பயன்பாடு கீழ்பாலமும் (Limited use subway) கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இடையூறு மற்றும் நெருக்கடி ஏற்படும். மேலும் மேம்பாலத்திற்கு கீழ்ப்பகுதியில் இருபுறமும் சாலைகள் அமைக்கும் பொருட்டு சாலை ஓரங்களில் அமைந்துள்ள வியாபார ஸ்தலங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் பாதிப்புக்குள்ளாவதாலும் பொதுமக்கள் நலன்கருதி முதலாம் இரயில்வே கேட்டில் உபயோக கீழ்ப்பாலம் மற்றும் இரண்டாம் இரயில்வே கேட்டில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டாமென நெடுஞ்சாலைத்துறையினருக்குத் தெரிவிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி விபரம் கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள் திருநெல்வேலிக்கு தெரிவிக்கப்பட்டது.<br><br>தற்போது கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) திட்டம், திருநெல்வேலி கடிதம் எண் எச்சி 486 & 487/2009 JDO/நாள் 23.02.2012ம் கடிதத்தில் மேம்பாலம் இரண்டு இடங்களில் கட்டுவதற்கு உத்தேசம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி பணிக்கு நில ஆர்ஜிதம் அதிகமாக எடுக்க வேண்டியுள்ளதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 10.05.2010ம் தேதிய கடிதத்தில் அளவான கீழ்பாலம் (Limited use subway) கட்டலாம் என நெடுஞ்சாலைத்துறை செயலாளர் அவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். அளவான கீழ்பாலம் கட்டினால் குறைந்தளவு இடம் நில ஆர்ஜிதம் செய்யலாம் எனவும் கழிவுநீர் (Drainage) உட்புகுதாவாறு புதிய தொழில்நுட்ப முறையில் அமைக்கலாம் என தெரிவித்துள்ளார்.<br><br>மேலும் இரயில்வே மேம்பாலம் போக்குவரத்து (Traffic Census) கணக்கின்படி பாலம் அகலம் 8.60 மீட்டர் மற்றும் சர்வீஸ் ரோடு நடைபாதை சேர்த்து 22.60 மீட்டர் அகலத்திற்கு அமைக்க வேண்டும் எனவும், நிலையில் 8.50 மீட்டர் அகலம் தான் உள்ளது எனவும், இரண்டு மேம்பாலங்கள் கடவு எண் 486ல் (இரண்டாம் ரயில்வே கேட்) 3178 சதுர மீட்டர் இடம் மற்றும் கடவு எண் 487ல் (முதலாம் இரயில்வே கேட்) 3178 சதுரமீட்டர் இடம் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது என தெரிவித்து, இத்திட்டம் நீண்ட நாளாக நிலுவையில் உள்ளதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று பின்பு பொதுமக்களின் கருத்துக்கேட்டு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கடவு எண் 486 (இரண்டாம் இரயில்வே கேட்) மேம்பாலம் கீழரதவீதி முதல் கீழரதவீதி தொடர்ச்சி மற்றும் அழகேசபுரம் மெயின்ரோடு வரையிலும், கடவு எண் 487 மேம்பாலம் (முதலாம் இரயில்வே கேட்) வடக்கு காட்டன் ரோட்டில் தொடங்கி வலது மற்றும் இடது பக்கம் சத்திரம் தெரு வரையிலும் அமைகிறது. அளவான பயன்பாடு கீழ்பாலம் (Limited use subway) கட்டுவதற்கு நிலத்தடி நீர் சில அடி ஆழத்தில் உள்ளதால் நிலத்தடி நீர் உட்புகும் வாய்ப்புகள் உள்ளது. எனவே கடவு எண் 486 மற்றும் கடவு எண் 487 ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு தொடர்பாக மாமன்றத்திற்கு கருத்திற்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** இரண்டு மேம்பாலங்கள் கட்டுவது தொடர்பாக மாமன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>இ1/14302/2011 | |

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி.

இடம்: தூத்துக்குடி
நாள் : 27.04.2012